இரட்சிப்பு
RATCHIPPU
RATCHIPPU = SALVATION
Volume-14 January - 2025 Issue-08
Price Rs.5-00 Annual Subscription Rs.60/-

# இரட்சிப்பு ஜனவரி 2025 யுனிகோடு

இரட்சிப்பு ஜனவரி 2025 யுனிகோடு

## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

கர்தருடைய பெரிதான கிருபையால் கடந்த 2024ம் ஆண்டை விசுவாசத்துடனும் ஜெபத்துடனும் நிறைவு செய்து 2025ம் ஆண்டுக்குள் பிரவேசித்திருக்கிற தேவ பிள்ளைகளாகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பின் புத்தாண்டு-2025 நல்வாழ்த்துக்கள். புத்தாண்டில் புதிய ஆசீர்வாதங்களைத் தர கடவுள் வாக்களித்திருக்கிறார். 'எழுந்திருங்கள்', 'கடந்து செல்லுங்கள்' என யோசுவாவிடம் கடவுள் சொன்ன தைரிய-வார்த்தைகளை (யோசு-1:2) பற்றிக்கொண்டு, பயத்துடனும் பக்தியுடனும் கடவுளுக்கு நன்றிசொல்லி, புத்தாண்டில் உற்சாகத்துடன் செயல்படுவோம்.

நமது ஊழிய திட்டங்களான 'ஜெப-ஜன்னல்' ஜெப நேரங்கள் (ஜனவரி 10, 17, 24), 'அனைவரும்-ஊழியத்தில்' - கைபிரதி ஊழிய திட்டம், 'வேதாகம போட்டிகள்' ஆகியவற்றில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி கள-ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (தகவல் தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 18-ல் தரப்பட்டுள்ளன). தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

வேத-வரிகள்-167 யோசுவா-1:2

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**
நம்முடைய ஊழியக்காரனாகிய மோசே மரித்தான்; இப்போதும் நீயும் இந்த சனமுமாய் எழும்பி, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நாம் கொடுக்குந்தேசத்துக்குப் போங்கள்.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**
என் தாசனாகிய மோசே மரித்துப் போனான்; இப்பொழுது நீயும் ஜனங்கள் எல்லாரும் எழுந்து, யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்.

**திருவிவிலியம்; (பொது-1995)**
என் ஊழியனாகிய மோசே இறந்துவிட்டான். இப்பொழுது நீ புறப்பட்டு, இந்த யோர்தானைக் கடந்து, இந்த மக்கள் அனைவரோடும்கூட நான் இஸ்ரயேலருக்குக் கொடுக்கும் நாட்டுக்குச் செல்.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**
என் ஊழியனாகிய மோசே மரித்துவிட்டான். நீயும் இந்த ஜனங்களும், யோர்தான் நதியைத் தாண்டி நான் இஸ்ரவேல் ஜனங்களாகிய உங்களுக்கு கொடுக்கிற தேசத்துக்குள் செல்லவேண்டும்.

# ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - ஜனவரி 2025

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹமாஸ், இஸ்ரேல்-ஈரான், உக்ரைன்-ரஷ்யா போர்கள் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் பொருளாதாரம் சீரடைய... அமெரிக்க ஐக்கிய நாடுகளில் புதிதாக பதவியேற்கவிருக்கும் அரசுக்கு அதிகார மாற்றம் சுமூகமாக நடைபெற, இஸ்ரேல்-ஹிஸ்புல்லா போர்நிறுத்தம் மதிக்கப்பட்டு, லெபனான்-இஸ்ரேல் இடையே அமைதி நிலவ, இயற்கைப் பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... இந்திய ஒன்றிய அரசு அரசியல்-சாசனம் மற்றும் ஜனநாயக மரபுகளை மதித்து அனைத்து தரப்பு மக்கள் நலனுக்காகவும் பாரபட்சமின்றி செயல்பட...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள், இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டில் மத-வாத பிரிவினை-வாத அரசியல் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. சுமி ஜேஸ்மின், திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) பிரி-கே.ஜி முதல் பிளஸ்-2 வரையில் கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்காக... சிறப்பாக இந்த ஆண்டு அரசு பொதுத்தேர்வுகளுக்காக ஆயத்தப்படும் 10, 11, 12ம் வகுப்பு மாணவர்களுக்கு தேவையான ஞானம் வழங்கப்பட...

6) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் ஜேசன், சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், Dr.கிறிஸ்டினா, கிப்ட்சன் தங்கராஜ், ஜோயல் இன்பராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. அருள்தாஸ், திரு. ஜெரி, திருமதி. லீலா டேவிட், திருமதி. ஜேஸ்மின் ஞானதாஸ், Rev.கருணாகரன், திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், திரு. சுந்தர்சிங், திரு. அப்பன் டேவிட், திரு. ஜூலியன், ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

8) திருமதி. ஜெயக்கொடி, திரு. டி. மனோகர், திரு. பி. எச். ஜெயச்சந்திரன், திரு. ஹேமில்டன், திரு. யாபேஸ் சாமுவேல், திருமதி. பால், திருமதி. ராஜேஷ்வரி, திரு. டேனியல், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், Dr.ஷீபா, திருமதி. ஐலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி.ஜெயக்குமாரி, திருமதி. ரமோலா அதிசயராஜ், திருமதி. ஐரீன் வாக்கர் (கிரேஸ் திவ்யா), திருமதி. மெர்சி தங்கராஜ், திருமதி.மேரி தேவதாஸ், திருமதி. ஷைனி ஜேம்ஸ், திருமதி.அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.வனஜா ஹெர்பர்ட் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

புத்தாண்டு சிறப்பு தேவசெய்தி

# புத்தாண்டு 2025

## 12 மாதங்களிலும் ஆசீர்வாதங்கள்

வெளிப்படுத்துதல்-22:2

**NEW YEAR 2025**
**BLESSING THROUGH ALL THE 12 MONTHS**

**Rev. Aseervatham Rani**



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே! உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் புத்தாண்டு (2025) நல்வாழ்த்துக்கள். 'இரட்சிப்பு' மாத இதழில் தேவசெய்தியை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

12என்ற எண் வேதத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது. கடவுள் முக்கியமான நேரங்களில், முக்கிய மான இடங்களில் எண்:12ஐ முக்கியத்துவப்படுத்துவதை நாம் பார்க்கிறோம். யாக்கோபின் வம்சம் 12-கோத்திரங்கள், இயேசுவின் சீடர்கள் 12-பேர், ஒரு வருடத்தில் 12-மாதங்கள் என்று திருமறை சொல்லுவதை நாம் பார்க்கிறோம். இவ்வாறு, தேவனாகிய கர்த்தரும், ஆண்டவராகிய இயேசுவும் எண்:12ஐ முக்கியப்படுத்துவதை நாம் பார்க்கிறோம். வெளி-22:2 வசனத்தின் துணையுடன், 'வருடத்தின் 12மாதங்களிலும் ஆசீர்வாதங்கள்' என்ற கருத்தை தியானிப்போம்.

**தியான வசனம்: (வெளி-22:1)**

நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இரு கரையிலும் 12-வித மான கனிகளைத்தரும் ஜீவ விருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.

**12 மாதங்களும் புதிய ஆசீர்வாதங்கள்:**

அப்போஸ்தலனான பரி.யோவான் பத்மு தீவின் தரிசனத்தில் கண்ட ஜீவ-விருட்சம் மாதந்தோறும் 12-விதமான கனிகளை கொடுக்கும் எனவும் அதின் இலைகள் ஆரோக்கியம் தரும் மருந்தாகும் எனவும் அவருக்கு உணர்த்தப்பட்டது. இதே போன்ற மரங்களைக் குறித்து எசேக்கியேல் தீர்க்கதரிசி, "நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரையிலும் புசிப்புக்கான சகலவித விருட்சங்களும் வளரும்; அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை; அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்தஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புது கனிகளை கொடுத்துக்கொண்டே யிருக்கும்; அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்குமானவை கள்." (எசே-47:12) என சொல்லுகிறார். அவ்வண்ணமே, நமது ஆண்டவர் 2025ம் வருடத்தின் 12மாதங்களிலும் உங்கள் வாழ்வில் உணவு,

உடை, உறைவிடம், ஆரோக்கியம், அறிவாற்றல் ஆகிய புதிய ஆசீர்வாதங்களைத் தந்து வாழ்வை வளமாக்கித் தருவார்.

**1. நீரூற்றுகள்-12: (யாத்.15:22-27)**

ஏலீமில் 12-நீரூற்றுகளும் 70-பேரீச்ச மரங்களும் இருந்தன. இஸ்ரவேலர் எகிப்தில் அடிமை களாயிருந்தபோது கர்த்தர் அவர்களை மீட்டு வழி நடத்தி 12-நீர் ஊற்றுகளண்டை கொண்டுவந்து லட்சக்கணக்கனக்கான அவர்ளின் தாகத்தை தீர்த்து அவர்கள் ஜீவனையும் மீட்டார். இந்த நீரூற்றுக்கள் வாழ்வின் வளத்தையும், செழுமையையும் குறிக் கின்றன. கர்த்தர் இவ்வாண்டின் 12 மாதங்களிலும் நமக்கு தண்ணீரையும், உணவையும் தந்து நம் வாழ்வின் தேவைகளை சந்திப்பார் (எண்ணையும், மாவையும் ஆசீர்வதிப்பார்). வேதம் சொல்லு கிறது: “ஆண்டவர் ஊற்றுகளை கொண்டு வறண்ட வனாந்திரத்தை செழிப்பாக்குவார். பாலைவனமானாலும், பள்ளத்தாக்கானாலும், எந்த நிலையாய் இருந்தாலும் கர்த்தர் வழிநடத்துவார்.” (ஏசா-41:18). வறுமை, வளர்ச்சியின்மை, மனுஷ-சகாயம் இன்மை போன்ற சூழல்களில் இறைவன் நம்முடன் இருந்து நம்மை வழி நடத்துவார்.

**2. கற்கள்-12: யோசுவா 4:2-7**

அ) அற்புதத்தின் கற்கள்-12: யோசு-4:7

இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்து கானான் தேசத்தில் நுழைந்தபோது யோசுவாவின் சொற்படி, கோத்திரத்திற்கு ஒன்றுவீதம், 12-கற்களை சுமந்து சென்று, தடைகள் நீங்கிய அற்புதத்தின் அடையாளமாக வைத்தார்கள். நீங்களும் ஆண்டவரைப் பற்றிக் கொள்ளும்போது, 2025ம் வருடத்தின் 12 மாதங்களிலும் அவர் உங்கள் நடுவில் இருந்து யோர்தான் போல் வரும் தடைகளை நீக்கி உங்கள் வழிகளை விசாலமாக்குவார்.

ஆ) ஆசரிப்பின் கற்கள்-12: யாத்-28:21

ஆரோனின் ஆசாரிய உடையில் பதிக்கப்பட்ட கற்கள்-12 (யாத்-39:14). ஆரோன் கடவுளின் பிரதிநிதியாய் நிற்கிறார். ஆரோனை இஸ்ரவேலர் பார்க்கும்போது அவருடைய அங்கியின் 12-கற்கள் அவர்களுக்கு ஞாபகக்குறியாய் இருந்துகொண்டே இருந்தன. அவ்வாறாகவே, இயேசுவும் நமது பிரதிநிதியாய் தேவனுக்கு முன் நிற்கிறார். இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவின் முன் நிற்பதால், நாம் இயேசு கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்ட ஜனமாக இருக்கிறோம் என்னும் ஆசீர்வாதம் நமக்கு உண்டு.

இ) அக்கினியின் கற்கள்-12: 1ராஜா 18:31-38

எலியா தீர்க்கத்தரிசிக்கும் பாகால் தீர்க்கத்தரிசிகளுக்கும் நடந்த விசுவாச யுத்தம், ஜெப-யுத்தம், வார்த்தை-யுத்தம் நம் அனைவருக்கம் தெரியும் அல்லவா? எலியா எந்த இடத்தில் அவமானப்பட்டாரோ அதே இடத்தில் 12-கோத்திரத்திற்கு ஒரு கல்லாக 12-கற்களை வைத்து பலிபீடம் அமைத்து அதில் பலியிட்டபோது, கற்கள் அக்கினி கற்களாயின, கர்த்தர் அக்கினியில் பதிலளித்தார் அல்லவா? அவமானப்பட்ட இடத்தில் கர்த்தர் அக்கினியாய் இறங்கி, தாமே தேவன் (கர்த்தரே தேவன்) என்பதை நிரூபித்தார் அல்லவா? நாமும் எங்கெல்லாம் அவமானம் அடைகிறோமோ, அங்கெல்லாம் கர்த்தர் நமக்காக அக்கினியாய் இறங்குவார்.

**3. கோத்திர பிரபுக்கள்-12பேர்: எண்-1:44**

இஸ்ரவேலின் 12-கோத்திர பிதாக்களின் வம்சத்திற்கு ஒருவர் வீதம் 12-கோத்திர பிரபுக்கள் தேர்தெடுக்கப்பட்டு ஊழியத்தில் உதவி செய்தார்கள் என எண்-1:44 சொல்கிறது. ஆபிரகாமின் (ஆகாரின்) குமாரனான இஸ்மவேலைக் குறித்து, "நான் அவனை ஆசீர்வதித்து மிகவும் அதிகமாக பலுகிப் பெருக பண்ணுவேன். அவன் 12-பிரபுகளை பெறுவான்; அவனை பெரிய ஜாதியாக்குவேன்"; என்று ஆதி 17:20ல் வாக்குரைத்த தேவன் அதை நிறைவேற்றியதை இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். 2025ம் ஆண்டின் 12-மாதங்களிலும் ஆசீர்வதிக்க வாக்களிக்கும் நம் கர்த்தருக்கு ஊழியம் செய்ய நம்மை அர்ப்பணிப்போம்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நாம் கர்த்தரின் சீடர்களாய் செயல்படும்போது மத்-19:28-ல், "மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் 12-கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய் 12-சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள்" என்ற இயேசுவின் வாக்குப்படி பரலோக ஆசீர் வாதங்களைப் பெறுவோம் என்பதில் சந்தேகம் இல்லை. 12-மாதமும் கர்த்தர் நாம் கையிட்டு செய்யும் பணிகளையும், நமது உழைப்பையும் வருமானத்தையும் ஆசீர்வதிப்பார். நம் விருப்பங் களையும், வேண்டுதல்களையும், விண்ணப்பங்களையும் நிறைவேற்றி, தமது ஆற்றலை நமக்குத் தந்து நம்மை வழி நடத்துவார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

அருட்பணி. ஆசீர்வாதம் ராணி, ஆயர் மற்றும் குருசேகர தலைவர்,
சிஎஸ்ஐ தூய ஆவியானவர் ஆலயம், சாலிகிராமம் குருசேகரம், சென்னை-93. தென்னிந்தியா..

===================================================================================

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

Good Tidings Bible-Prints Ministries

## 'நல்ல விதைகள்' சுவிசேஷ கைப்பிரதிகள்

'GOOD SEEDS' GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். SONSOR செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

---

**அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்**
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

===================================================================================

### வேத ஆராய்ச்சி

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-92 எப்பிசோடு-92

AUTHOR: REV.DR. D. SURESH RAJAN

**முன்னுரை:**

இரட்சிப்பு வாசகர்கள் அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கடவுளுடைய மாறாக கிருபையும் அன்பும் உங்கள் ஒவ்வொருவரு டைய உள்ளத்தையும் இல்லத்தையும் நிறைத்து அவரது அமைதி பெருக்கினால் உங்களை ஆட்கொள்வாராக.

'ஓய்வு நாளின் துதிப்பாடல்' என்ற தலைப்பில், தேவனைத் துதிக்கவும், அவரது அன்பையும் மகிமையையும் பகலிலும் இரவிலும் பாடுவதற்கான அழைப்பாக இந்த சங்கீதம் அமைந்துள்ளது. வேத புருடர்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட சம்பவங்களையும், அனுபவித்த ஆசீர்வாதங்களையும் தங்களுக்கு பின்வரும் சந்ததியினர் அறிந்து கொள்ளவும் அவர்கள் இறைவனுடைய மாட்சியை யும் புகழையும் பாடவும் வசதியாய இதை எழுதி வைத்து சென்றுள்ளனர். விசேடமாக, சங்கீத புத்தகத்தின் தொகுப்பு நமது அனுதின வாழ்வில் ஏற்படும் பல அனுபவங் களின் அடிப்படையில் அமைந்துள்ளது மிகவும் சிறப்பானதாகும்

**1. நன்றியுரைத்தல்: (வச:1-6)**

நன்றியுரைத்தல் என்பது கிறித்தவ பண்புகளில் மிகவும் இன்றியமையாததாகும். நமது அன்றாட வாழ்வில் சிறு சிறு உதவிகள் செய்தவர்களுக்கு கூட நன்றி சொல்லும் நாம், கடவுள் நமக்கு செய்த நன்மைகளுக்காக நன்றி சொல்லவும், நன்றியறிதலுடன் வாழவும் தவறிவிடுகிறோம். "ஆண்டவருக்கு நன்றி கூறுவது நன்று: உன்னதரே! உமது பெயரைப் புகழ்ந்து பாடுவது நன்று" என்று சங்கீதக்காரர் கூறுகிறார் (வச-1). நாம் ஏன் நன்றியுடையோராய் இருக்க வேண்டும்? ஏனெனில், கடந்த நாட்களெல்லாம் கடவுள் நம்மை அருமையாக பாதுகாத்தார். நமது சோதனையின் நேரங்களில், வியாதியின் நேரங்களில், நமது இழப்புகளில், நமது வறுமையில், நமது தனிமையில், மனிதரின் உதவி கிடைக்காத சமயங்களில் வியத்தகு விதத்தில் கடவுளின் பேரருளால் நாம் பாதுகாக்கப்பட்டோம். இதையே சங்கீதக்காரர், "ஆண்டவரே! உம் வியத்தகு செயல்களால் என்னை மகிழ்வித்தீர்: உம் வலிமைமிகு செயல்களைக் குறித்து நான் மகிழ்ந்து பாடுவேன். ஆண்டவரே! உம் செயல்கள் எத்துணை மேன்மையாவை: உம் எண்ணங்கள் எத்துணை ஆழமானவை." (வச-4, 5) என குறிப்பிடுகிறார். ஆகவே நாம் நம்மை அற்புதமாய்

பாதுகாக்கும் பரமனுக்கு நன்றியுடன் இருக்கவேண்டும். எல்லா வேளைகளிலும் நாம் கடவுளைத் துதிக்கும் மனப்பக்குவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

“காலையில் உமது பேரன்பையும் இரவில் உமது வாக்குப் பிறழாமையையும் பத்து நரம்பு வீணையோடும், தம்புரு சுரமண்டல இசையோடும் எடுத்துரைப்பது நன்று” (வச-2, 3) என சங்கீதக்காரர் கூறுகிறார். “அறிவிலிகள் அறியாததும் மூடர் உணராததும் இதுவே” (வச-6) எனக்கூறுவதன் மூலம் கடவுளுக்கு நன்றி கூறாதவர் புத்தி பேதலித்தவர் என்றும் குறிப்பிடுகிறார். ஆகவே, நாம் எந்நாளும் இறைவனுக்கு நன்றியுரைப்போராய் இருக்க ஆண்டவர் உதவி செய்வாராக.

**2. பொல்லோரின் வீழ்ச்சி: (வச 7-11)**

நமக்கு தீமை செய்வோர் நம்மை சூழ்ந்தே உள்ளனர். தங்களது சுய லாபத்துக் காக இவர்கள் பலவிதங்களில் நமக்கு தீங்கு இழைக்கின்றனர். இப்படிப்பட்ட நபர்கள் நமது மனதிற்கு வேதனையை உண்டாக்குபவர்களாயும், நம் வாழ்வில் ஒரு தடைக்கல்லாயும் இருக்கின்றனர். இப்படிப்பட்ட தீயவர்களின் வாழ்வு செழுமையானதாக இருப்பதைப்போல் காட்சியளிக்கிறது. அத்தகைய நேரங்களில் நாம் மனதில் காயப்பட்டவர்களாக, “உண்மையாய் நடப்பதினால் என்ன நன்மை?” என்று வேதனைப்படுகிறோம். ஆனால் சங்கீதக்காரர் இங்கு, “பொல்லார் புல்லைப் போன்று செழித்து வளரலாம்: தீமை செய்வோர் அனைவரும் பூத்துக் குலுங்கலாம்! ஆனால், அவர்கள் என்றும் அழிவுக்கு உரியவரே” (வச-7) என்றும், “ஆண்டவரே! உம் எதிரிகள் - ஆம், உம் எதிரிகள் அழிவது திண்ணம்: தீமை செய்வோர் அனைவரும் சிதறுண்டுபோவர்” (வச-9) என்று கூறியிருப்பது, பொல்லாதோராய் இருப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை விளக்குவதாக உள்ளது. கடவுளுக்கு உகந்தோராய் நாம் வாழும்போது எதிரியின் சீற்றம் நம்மை எதிர்கொண்டாலும், நாம் எல்லாவற்றிலும் வெற்றி சிறக்க கடவுள் உதவிசெய்வார் என்பதையும் சங்கீதக்காரர் பின்வருமாறு பதிவு செய்கிறார். “காட்டெருமைக்கு நிகரான வலிமையை எனக்கு அளித்தீர்: புது எண்ணெயை என்மேல் பொழிந்தீர். என் எதிரிகளின் வீழ்ச்சியை நான் கண்ணாரக் கண்டேன்: பொல்லாருக்கு நேரிட்டதை நான் காதாரக் கேட்டேன்.” (வச-10, 11). ஆகவே இறைவன் தமது வல்லமையின் அருட்பொழிவை அருளி எதிராளிகளின் சீற்றத்திற்கும் சதித்திட்டங்களுக்கும் நம்மை விலக்கிக் காப்பார் என்பது நமக்கு ஆறுதல் அளிக்கும் செய்தியாகும்.

**3. நேர்மையாளரின் வாழ்வு: (வச 12-15)**

நாம் நீதிமான்களாக வாழ வேண்டும் என்பதை திருமறை பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறது. இறைவன் இவ்வுலகில் நம்மை படைத்ததின் நோக்கம், நாம் அவரைப் போல் மாற வேண்டும் என்பதாகும். எனவேதான், “கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்: கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்: ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்” (ஆதி 1:27). என திருமறை கூறுகிறது. கடவுளுடைய உருவில் படைக்கப்பட்ட மனுக்குலம், அவரது திருச்சித்தம் செய்ய வேண்டும். “நேர்மையாளர், பேரீச்சை மரமெனச் செழித்தோங்குவர்: லெபனோனின் கேதுரு மரமெனத் தழைத்து வளர்வர். ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோர் நம் கடவுளின் கோவில் முற்றங்களில் செழித்தோங்குவர். அவர்கள் முதிர் வயதிலும் கனிதருவர்: என்றும் செழுமையும் பசுமையுமாய் இருப்பர்: “ஆண்டவர் நேர்மையுள்ளவர்: அவரே என் பாறை:

அவரிடம் அநீதி ஏதுமில்லை என்று அறிவிப்பர்." (வச 12-15) என நேர்மையாளர்கள் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்களை சங்கீதக்காரர் பட்டியலிடுகிறார். ஆகவே, இறைவன் விரும்பும் மக்களாக, இறைவனைப் போல் வாழும் மக்களாக, நேர்மையாளர்களாக நாம் வாழ்ந்து இறைவனுக்கு புகழை செலுத்துவோம்.

**முடிவுரை:**

நன்றி நிறைந்த மனதுடன் ஆண்டவரை துதித்து, அவருடைய அன்பையும் கிருபையையும் நினைவில் கொள்ளவேண்டியதன் அவசியத்தை இச்சங்கீதம் உணர்த்துகிறது. இது ஒரு ஆன்மீக அனுபவமாகவும், நமது வாழ்வில் இறைவனை கனப்படுத்தும் வழியாகவும் இருக்கிறது. இறைவன் நம் வாழ்வில் செய்த நன்மைகளை நினைத்து நாம் அவரைப் போற்றுவோம். இறைவனின் முகச்சாயலில் உருவாக்கப்பட்ட நாம், அவரை பிரதிபலிப்பவர்களாக இவ்வுலகில் வாழ்ந்து அவருக்குப் புகழ் சேர்ப்போம்.

இந்த புதிய வருடம் உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாய் இருக்கும் என்ற உறுதியான விசுவாசத்துடன் மறுபடியும் உங்களை வாழ்த்துகிறேன்.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,இணை நிறுவனர்,
வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

================================================================================

# 'அனைவரும் ஊழியத்தில்'

## ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

### இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. இத்திட்டத்தில் பங்குபெற, உங்கள் தபால் முகவரியை கடிதம் அல்லது வாடஸ்-அப்- மூலம் எமக்கு அனுப்பவேண்டும். (எமது முகவரி - வாட்ஸ்-ஆப் எண் பக்கம்-18ல்).

2. முகவரி கிடைத்தவுடன் தங்களுக்கு 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், குப்பை-வண்டிக்காரர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். கைப்பிரதிகளை வெளியூரில் வாழும் இயேசுவை அறியாத உங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு தபால்-உறையில் அனுப்பி வைக்கலாம்.

3. கைப்பிரதிகள் தீர்ந்தவுடன் விருப்பம் தெரிவித்தால் மீண்டும் 30-கைப்பிரதிகளை உங்களுக்கு அனுப்பிவைப்போம். இத்திட்டத்தில் இணைந்து நற்செய்தி பரவ உதவுங்கள்.

கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இக்கைப்பிரதிகளை வழங்குவதைத் தவிர்க்கவும்.

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

================================================================================

# வேதாகம போட்டி-170 (டிசம்பர்-2024)

## சரியான பதிலளித்தோர்

1) அஜந்தா சாந்தி ஆண்டனி (திண்)
2) அமலியா லோகநாதன் (திலை)
3) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
4) ஏஞ்சல் C. (திலி)
5) ஏஞ்சல் டார்வின் (கன்)
6) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
9) அன்னாள் ஜெபக்கனி (கோய)
10) அரோமா சாத்ராக் (திலி)
11) ஆர்தர் மாசில்லாமணி (சென்)
12) அருள்செல்வி (விரு)
13) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
14) அசோக் குமார் பிரின்ஸ் (தூத்)
15) பெல்சி தங்கராஜ் (சென்)
16) பெனிட்டா பிராங்க்ளின் Dr. (சென்)
17) பியூலா ஜேசுராஜன் (பாண்)
18) பியூலா ராஜசெல்வன் (கோய)
19) செலினா பென்சி வில்சன் Dr. (குவை)
20) செலினா வின்சென்ட் (திலி)
21) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
22) சந்திரலேகா (ஆபி)
23) சந்திரா சாமுவேல் (திலி)
24) சார்லஸ் ஃபின்னி Dr. (சென்)
25) சார்லஸ் சாலமோன் Gp.Capt (புனே)
26) சார்லட் டேவிட் (சென்)
27) செல்லம் சங்கீதா (திலி)
28) சித்ரா பெஞ்சமின் (திளு)
29) கிறிஸ்டல் ஜாய் யோபு (திரு)
30) கிறிஸ்துதாஸ்; (ஈரோ)
31) கிறிஸ்டி ஆயிட்டஸ் (திலி)
32) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
33) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் (தூத்)
34) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
35) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
36) சிந்தி ஜோஷ்வா (தஞ்)
37) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
38) டெய்ஸி சாம் (ஆபி)
39) டேனியல் தாமஸ் (திலி)
40) டேனிங் சொர்ணா ஜெஸ் (திலி)
41) டேவிட் J.R. (சென்/கோய)
42) தெபோராள் ஆனந்தமணி (தூத்)
43) தெபோராள் D. (சென்)
44) தேவமணி ஆபிரகாம் (தூத்)
45) தேவநேசம் ராஜாசிங் (சென்)
46) டோராபாய் (சென்)
47) எலிசபெத் செல்லத்துரை (சென்)
48) எமிமாள் மில்டன் (சென்)
49) எப்சிபா ஜாண் (ராணி)
50) எஸ்தர். D.R. (திலி)
51) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
52) ஃபிரீடா லிவிங்ஸ்டன் (காஞ்)
53) குளோரி ரவீந்திரன் (திலி)
54) ஞானஜோதி பேரின்பம் (விரு)
55) ஞானம் ஜெபராஜ் (திலி)
56) ஞானம் பிலிப் (கோய)
57) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
58) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
59) கோல்டா ஜேசுபாதம் (மும்)
60) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
61) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
62) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
63) கிரேஸியா ஜெயபால் (சென்)
64) கிரிசெல்டா செய்லர் (சென்)
65) ஹெலென் ஜான்சிராணி (திலி)
66) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
67) ஹெலன் திலக் (தூத்)
68) ஹேமா அஜீத் (சென்)
69) ஹேமா கேப்ரியேல் (பெங்)
70) ஹெப்சி அசரியா (பாண்)
71) ஹெப்சிபா மங்களராஜ் (திலி)
72) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
73) இளவரசி ஜோபிதா (கோய)
74) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)

75) இந்திரா கெத்ஸி டேவிட் Dr. (திலி)
76) ஜமீலா செல்வராஜ் (சென்)
77) ஜமுனா K. (சென்)
78) ஜானகி (திலி)
79) ஜேன் தர்மராஜ் (திலி)
80) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
81) ஜான்ஸி சந்தியா (திலி)
82) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
83) ஜெபா கோல்டா (திலி)
84) ஜெபா ஜெயராஜ் (சென்)
85) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
86) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
87) ஜெபசீலி கிளின்டன் (சென்)
88) ஜெபஸ்டின் G. (திலி)
89) ஜெபா சீனி (திலி)
90) ஜீவா டேவிட் சாலோமோன் (தென்)
91) ஜெமீலா நிக்ஸன் (சென்)
92) ஜெனிலா (சென்)
93) ஜெனித்தா செல்வின் (திலி)
94) ஜெரின் ஸ்டீபன் (மும்)
95) ஜெஸி செல்லத்துரை (கோய)
96) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
97) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
98) ஜெயா ஆல்பர்ட் (தஞ்)
99) ஜெயக்குமாரி (கோய)
100) ஜோனா ஸடீபன் (சென்)
101) ஜீஜிபாய் எட்வர்ட் (சென்)
102) ஜோஸ்பின் ஜெஸி (சென்)
103) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
104) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
105) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
106) கலையரசி செல்வராஜ் (சென்)
107) கஸ்தூரி எலியாஸ் (திலி)
108) கிங்ஸ்லி தங்கமணி (சென்)
109) கிருபாவதி S. (சென்)
110) கோயில்பிள்ளை ஞானத்தாய் (தென்)
111) லதா மைகேல்ராஜ் (சென்)
112) லீலா டேவிட் (சென்)
113) லீலா ஜோஸப் (கோய)
114) லில்லி ஜாண்ஸன் (சென்)
115) லிஸி டென்சிங் (திலி)
116) மலர்விழி சாம்சன் (திரு)
117) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா)(ஜெய)
118) மல்லிகா V. (சென்)
119) மரிய பாப்பா (சென்)
120) மரியாள் J.S. (தூத்)
121) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
122) மெர்சிபா (கோய)
123) மெர்சி ஃபுளோரா பாஸ்கரன் (வேலூ)
124) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
125) மெர்லின் சாமுவேல் (சென்)
126) மில்காள் சாம் (சென்)
127) நகோமி நிர்மலா (சென்)
128) நதியா லாரன்ஸ் (திரு)
129) நேச மாலா பீட்டர் (திலி)
130) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
131) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
132) ஓலிவியா லேங்டன் (திசி)
133) பாக்யபாய் ஆரோன் (திலி)
134) பமீலா எட்வின் (கன்)
135) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
136) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
137) பொன்மணி உத்தமசிங் (தூத்)
138) பிரேமா ஸ்டாலின் (சென்)
139) பிரேம்குமாரி ஜெய்சிங் (சென்)
140) பிரின்ஸ் தயாநிதி (சென்)
141) பிரின்ஸ்லின் ஷைனி (தென்)
142) பிரிசில்லா தாஸ் (சென்)
143) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
144) ரேச்சல் ஈஸ்டர் (வேலூ)
145) ராஜபிரமீளா (திதூ)
146) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
147) ரமோலா அதிசயராஜ் (திலி)
148) ராணி ஃபுளோரா (தென்)
149) ராணி பிரபாகர் (திலி)
150) ராணி சாமுவேல்ராஜ் (சென்)
151) ரத்னாவதி பாண்டியன் (சென்)
152) ரோஸ்லின் மார்கிரெட் (சென்)
153) ரூபவதி நோபிள் (திலி)
154) ரூத் (HAPP) (திசி)

155) ரூத் ஜாண்ஸன் (திலி)
156) சலோமி மனோகர் Dr. (சென்)
157) சங்கீதா ஜெனிஸ் (திலி)
158) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
159) சாரா பாலசிங் (மது)
160) சரோஜா செல்வராஜ் (சென்)
161) சரோஜினி எலிசபெத் (சென்)
162) செல்வ அமுதா ஜார்ஜ் (சென்)
163) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
164) செல்வராஜ் K. (கோய)
165) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
166) செல்வி S. (சென்)
167) செல்வி அமிர்தராஜ் (திளு)
168) ஷாலி எடிசன் (சென்)
169) சாந்தி ஆல்பர்ட் (தென்)
170) சாந்தி ஜெயசீலன் (சென்)
171) சாந்தி ரோஸ் (கோய)
172) ஷர்மிளா செல்வராஜ் Dr. (கட)
173) ஷீபா சாம்ஸன் (சென்)
174) ஷீலா G. (செங்)
175) ஷீலா இஸ்ரேல் (திசி)
176) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
177) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
178) சிந்தியா
179) சவுந்;தரம் சாலமோன் (சென்)
180) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
181) ஸ்டெல்லா கனகராஜ் (சென்)
182) ஸ்டெல்லா தூசைய்யா (தூத்)
183) சுகிர்தா ஆல்வின் (சென்)
184) சுகிர்தா சின்னதுரை (திலி)
185) சுஜாதா சாமுவேல் (சென்)
186) சுமித்ரா B. (சென்)
187) சுந்தரிபாய் (தூத்)
188) சுசீலா தியோடர் (திசி)
189) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
190) தனசீலி ஞானராஜ் (சென்)
191) தெல்மா ஸ்டேன்லி (மது)
192) உமா குளோரி (சென்)
193) வனஜா ஹெர்பர்ட் (திலி)
194) வசந்தா அன்பன் (திலி)
195) வசந்தா சந்திரசேகர் (கோய)
196) வசந்தா சேகர் (சென்)
197) வசந்தா துரைராஜ் (OFT)(திசி)
198) வசந்தி கருணாகரன் (சென்)
199) வசந்தி வாசன் (சென்)
200) விஜயராணி A. (சென்)
201) விஜி டேனியல் (செங்)
202) விமலா ஜெயக்குமார் (தூத்)
203) விண்ணரசி ரோஸ் (சென்)
204) வினோலியா பால் (மது)
205) வினோலியா ஜேம்ஸ் (தூத்)
206) வினோலியா வில்சன் (திதூ)
207) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
208) வைலட் சைரஸ் (திலி)

==========================================================================================
==========================================================================================

## வேதாகம போட்டி-170 சரியான விடைகள் (யாத்திராகமம்)

1. 430வருஷம் யாத்:-12:40
2. பெசலயல்,அகோலியாப்-யாத்:-35:30,34
3. எகிப்தில் யாத்:-1:8
4. 40நாள் யாத்:-24:18
5. சாட்சிப்பெட்டி மீது யாத்:-26:34
6. சாட்சியின் 2கற்பலகை யாத்:-31:18
7. மரணதண்டனை (கொலை) யாத்:-21:17
8. ஏலீம் யாத்:-15:7
9. சரி - யாத்:-22:18
10. தவறு - யாத்:-14:14
11. சரி - யாத்:-15:3
12. சரி - யாத்:-20:8
13. அ - முக்காடு யாத்:-34:33
14. இ - ஆபரணங்களை யாத்:-3:6
15. ஆ - பரிதானம் யாத்:-23:8
16. ஆ - சமுத்திரத்தின் யாத்:-14:29
17. மன்னா யாத்:-16:16,22,24,32,33
18. மோசேயின் கைகள் யாத்:-17:11,12
19. எரி.கொப்புளங்கள் யாத்:-9:8,9,10
20. பஸ்கா இரத்தம் யாத்:-12:5,7,13,22,23

# வேதாகம போட்டி-171

## போட்டி எண்:171 (ஜனவரி-2025) வேத-பகுதி: லேவியராகமம்

தொகுப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

**வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-01-2025**

1. கர்த்தர் கட்டளையிடாத அந்நிய அக்கினியை சந்நிதியில் கொண்டுவந்தோர் யார்?
2. சமாதானபலியாகிய ஸ்தோத்திர பலியின் மாம்சம் என்றைக்கு புசிக்கப்படவேண்டும்;?
3. ஆரோனின் சிறிய தகப்பனுடைய பெயர் என்ன?
4. பரிசுத்த ஸ்தலத்துக் கணக்கில் ஒரு சேக்கல் என்பது எவ்வளவு?
5. ஆசாரியனுக்காக இடப்படும் போஜனபலி புசிக்கப்படாமல், என்ன செய்யப்படவேண்டும்?
6. ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது எது?
7. முதலாம் மாதம் 14ம் தேதி அந்திநேரமான வேளை என்ன பண்டிகையாய் இருக்கும்?
8. யாருக்கு முன்பாக எழ வேண்டும், யாருடைய முகத்தைக் கனம்பண்ண வேண்டும்?
9. 'பாவநிவாரணபலி எப்படியோ குற்றநிவாரணபலியும் அப்படியே' - **சரியா தவறா?**
10. \பிரமியம் இல்லாதவன் ஏறும் எந்தச்சேணமும் தீட்டாயிருக்கும்.' **சரியா தவறா?**
11. 'இரணமாம்சம் தீட்டுள்ளது; அது குஷ்டம் அல்ல.'- **சரியா தவறா?**
12. 'முயலானது அசைபோடாததாயிருந்தும், அதற்கு விரிகுளம்பில்லை' - **சரியா தவறா?**
13. என் ஓய்வுநாட்களை ஆசரித்து, '**இதை**'க் குறித்து பயபக்தியாயிருப்பீர்களாக:
அ) நியாயப்பிரமாணம் ஆ) பலிபீடம் இ) பாவநிவர்த்தி ஈ) பரிசுத்த ஸ்தலம்
14. பலிபீடத்தின்மேல் '**இவைகள்**' சுகந்த வாசனையாகத் தகனிக்கப்படலாகாது:
அ) முதற்கனிகள் ஆ) பணிகாரங்கள் இ) புறாக்கள் ஈ) ஆட்டுக்குட்டிகள்
15. பலிபீடத்தின்மேல் '**இது**' எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கவேண்டும்;:
அ) விளக்கு ஆ) தீபம் இ) தீப்பந்தம் ஈ) அக்கினி
16. பறக்கிறவைகளில் 4-காலில் நடமாடும் '**இவை**' யாவும் அருவருப்பாயிருப்பதாக:
அ) ஊரும்பிராணிகள் ஆ) மச்சங்கள் இ) ஜந்துகள் (ஈ) பூச்சிகள்
17. அண்ணன்-தம்பி இருவர் இவர்கள்! அக்கினி மாற்றிய ஆயர் இவர்கள்!
ஆபத்தை சந்தித்த அற்பர் இவர்கள்! அந்த சஷணமே செத்தவர் இவர்கள்! **யார் இவர்கள்?**
18. உடலின் 'உயிர்' இதற்குள் உண்டு! வாழ்வின் 'உயிர்' இதற்குள்; உண்டு!
உயிருக்கு இது 'சமம்' உண்ணவேண்டாம்! உண்பவர் உயிரிழப்பர் உண்ணவேண்டாம்!
**இது என்ன?**
19. 7-ம் மாதப் பண்டிகை, 7-நாளும் பண்டிகை! குடிசைகளில் பண்டிகை, குடியிருக்கும் பண்டிகை!
வருஷந்தோரும் பண்டிகை, வாரிசு-வரிசைக்கும் கட்டளை! **இது என்ன?**
20. திரைக்கு வெளியில் எரியும் விளக்கு! தினம் தினம் ஏற்றும் விளக்கு!
தெளிந்த எண்ணெயில் எரியும் விளக்கு! திவ்ய-தேவ சந்நிதி விளக்கு! **இது என்ன?**

==========================================================================

**பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463**



**கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்**

**பாகம்-68 எப்பிசோடு-68**

# பூமியின்ராஜாக்களுக்கு அதிபதி

**THE RULER OF THE KINGS OF THE EARTH**

## "ஓ ஆர்கோன் டோன் பஸிலியாடோன் டிஸ் ஜிஸ்"

O Orchon ton Basiliadon tis ges

பூமியின்ராஜாக்களுக்கு அதிபதியாகிய இயேசுகிறிஸ்துவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.வெளி-1:5

Grace and peace be unto you, from Jesus Christ who is the Ruler of the kings of the earth. Rev-1:5

இரட்சிப்பும், வல்லமையும், நமது தேவனுடைய ராஜ்யமும், கிறிஸ்துவின் அதிகாரமும் உடைய வரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு புத்தாண்டு ஸ்தோத்திர வாழ்த்துக்கள்!

**ஏசா-3:4** வாலிபரை அவர்களுக்கு அதிபதிகளாகத் தருவேன். பிள்ளைகள் அவர்களை ஆளுவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் கூறுகிறார்.

**எவர்களை ஆளுவார்கள்? (ஏசா-3:1,2,3)** இந்தியாவில் உள்ள பராக்கிரம சாலிகள், யுத்த-வீரர், நியாயாதிபதி, தீர்க்கதரிசி, சாஸ்திரி, மூப்பர், அதிபதிகள் கனம் பொருந்தியவர்கள், சாதுரியன் ஆகியோரை.

**இவர்களை எப்படி ஆளுவார்கள்? (தானி-5:11)** பரிசுத்த தேவனுடைய ஆவியானவர் இந்தியா வில், நம் திருச்சபையில், புதிய தலைமுறை-தானியேல் களை எழுப்பி, வெளிச்சமும், விவேகமும், தேவஞானமும் உடையவர்களாக அபிஷேகித்து, தமது வல்மையான கரத்தினால் அதிபதிகளாக வைக்கிறார்.

**எபி-11:33,34** இவர்கள் ராஜ்யங்களை ஜெயித்து, நீதியை நடப்பித்து வாக்குத் தத்தங்களை பெற்று, சிங்கங்களின் வாய்களை அடைந்து, அக்கினியின் உக்கி ரத்தை அவித்து, பட்டயக் கருக்குக்குத் தப்பி, பலவீனத்தில் பலன் கொண்டு, அந்நிய சேனைகளை முறியடித்து யுத்தத்தில் வல்லவர்க ளாக எழும்புவார்கள். இவர்கள் மூலம் இயேசுராஜா எழும்பி, தாமே பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி, தாம் ஒருவரே கடவுள் - வேறொருவர் இல்லை என்பதை வெளிப்படுத்துவார்.

**ஏசா-19:4** தேவ பிள்ளைகளுக்கு எதிரான எகிப்தியனை கடினமான அதிபதியின் கையில் ஒப்புவிப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் கூறுகிறார்.

**ஜெபம்:** அல்பாவும் ஒமேகாவுமானவரே, உம்மைத் துதிக்கிறோம். ஆதியும், அந்தமுமானவரின் கரத்தில் எங்களையும், எங்கள் தலைமுறையையையும் அர்ப்பணித்து, எங்கள் மூலமாக நீர் வெளிப்பட இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமேன்..

---

**தொகுப்பு: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**

==========================================================================



## <u>தேன்-துளி வேத வசனக் கதைகள்</u>

(கதை-164)

# இரு பொன்னான மனசுகள்

சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

இரண்டு சிறுமிகள் அண்டை வீடுகளில் வசித்து வந்தனர். கோடை விடுமுறையில் அவ்விரு சிறுபெண்களும், தங்கள் வீட்டின் எதிரில் குவிக்கப்பட்டிருந்த ஆற்று மணலில் விளையாடி மகிழ்ந்தனர். அவ்வாறாக, ஒருநாள் காலை-உணவுக்குப் பின் அவ்விருவரும் ஆற்றுமணலில் வீடுகட்டி விளையாடச் சென்றனர். கொஞ்சம் நேரம்; விளையாடுவதற்குள் இருவரும் சண்டையிடத் தொடங்கினர், பின்னர் கோபத்தில் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர்.

மதிய உணவு நேரம் வந்தது; இருவருக்கும் அவர்;களது தாய்மார் மதிய உணவு அளித்தபோது உணவை சாப்பிட மறுத்து, சோகத்துடனும் வெறுப்புடனும் காணப்பட்டனர். இதைக் கண்ட பிள்ளைகளின் தாய்மார், அவர்கள் பிரச்சனைக் கான காரணம்-வினவி, பிள்ளைகளின் சண்டை குறித்து அறிந்து கொண்டனர். நிலைமையை உணர்ந்த ஒரு தாயார், உடனே தன் மகளை அழைத்துக்கொண்டு பக்கத்து வீட்டுக்கு சென்று அங்கிருந்த தாயாரிடமும் மகளிடமும் பேசி இரு பிள்ளைகளிடையே சமாதானம் பேசி, ஒப்புரவாகச் செய்தார்கள். பின்னர், இரு தாய்மாரும், இரு பெண்பிள்ளைகளும் ஒருவருரிடம் ஒருவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர். பின்னர் அவர்கள் உணவு அருந்தி ஓய்வெடுக்கச்சென்றனர். மாலை 5மணிக்கு மீண்டும் ஆற்றுமணலில் விளையாடச் சென்ற அச்சிறுமிகள் தங்கள் பகையை மறந்து ஞாயிறு-பள்ளி மற்றும் வி.பி.எஸ் வகுப்புகளில் பயின்ற போதனைகளின்படி ஒருவருக்கொருவர் அன்பை பகிர்ந்துகொண்டனர்.

பிரியமானவர்களே! நாம் வாழும் இடங்களிலும் இவ்விதமான மனஸ்தாபங்கள் வரும்போது, அந்த இரு சிறுமிகளைப்போல் ஒருவரையொருவர் மன்னித்து ஒப்புரவாகுவோம். நாம் இயேசுவிடம் கற்றுக்கொண்ட பொறுமை, தாழ்மை, அன்புருக்கம், ஈகை போன்ற நற்பண்புகள் அடங்கிய வேதபோதனைகளை ஒரு-காதில் வாங்கி மறு-காதில் விட்டுவிடாமல், நம் வாழ்விலே அவைகளை கடைபிடிப்போம். இந்த புத்தாண்டில், பிறரிடம் குறை காண்;கிறவர்களாக நாம் இராமல், நமது குறைகளை உணர்ந்து தேவநாம மகிமைக்கென்று செயல்பட தீர்மானங்களை எடுத்து அவற்றில் நிலைத்திருந்து வளர்ந்து பெருக அன்புடன் வாழ்த்துகிறேன். வேதம் இவ்வாறு கூறுகிறது...

கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். கொலோ-3:13

கர்த்தர் நல்லவரும் மன்னிக்கிறவருமாய் இருக்கிறார். சங்-86:5

கர்த்தர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார். ஏசா-55:7

ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. தானி-9:10

---

<u>M.AZARIAH GNANADOSS M.A; M.ED</u>

EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900

================================================================================

இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு
# 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-6 பகுதி-5 எப்பிசோடு-30

**கட்டுரை ஆசிரியர்: அறிவர். திருமதி. சலோமி மனோகர்**



## 6. அக்பர் மற்றும் ஜேசுவைட்ஸ்
## 5. பேரரசர் அக்பரின் கடைசி நாட்கள்

கி.பி.1605ம் ஆண்டில் அக்பரின் வயது 63. தமது 50ம் வருட ஆட்சி காலத்தில் செப்டம்பர் மாதம் கடும் நோய்வாய்ப்பட்டார், அப்போது திருத்தந்தைகள் அவரைப் பார்க்க எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் அவர்கள் வருகையை ராஜாவுக்குத் தெரியப்படுத்தவோ அல்லது தந்தைகளிடம் வந்து பேசவோ யாரும் துணியவில்லை. ஏனெனில், ஏற்கனவே இதுபோன்ற அதிகார விஷயங்கள் ராஜாவை விட அவருடைய பிரபுக்களின் கைகளில் போய் சேர்ந்திருந்;தன. எனவே திருத்தந்தைகள் முயன்ற எந்த வழிகளும் பலனளிக்கவில்லை.

அக்பர் தமது மூத்த மகன் சலீமை அரியணைக்கு வாரிசாக நிர்ணயிக்கும் அளவுக்கு நீண்ட நேரம் விழிப்புடன் இருந்தார். பின்னர், அவர் தனது கடைசி வேதனைகளை அனுபவித்தார். அவர் கடவுளின் பெயரை உச்சரிக்க முயன்ற வேளையில் அவர் அருகில் இருந்தவர்கள், அவரை 'முகமது'வை மனதில் வைக்கத் தூண்டினார்கள். ஆனால் அவர் அதுபற்றி எந்த சம்மதமும் தெரிவிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

நிச்சயமாக அக்பர் ஒரு நாள் கிறிஸ்தவராய் மாறுவார்; தங்களுடனான அவரது உண்மையான மற்றும் நீண்ட, தொடர் நட்பு அவரை கிறிஸ்துவை நம்பச்செய்யும் என்று கற்பனை செய்த திருத்தந்தைகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. செப்டம்பர் 26ம் நாள் இரவு அக்பர் இறந்தார். அவர் இறந்தபோது, அவரை கிறிஸ்தவராக காட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப் படுகிறது; ஆனால், உண்மையில் இதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

திருத்தந்தை டுஜாரிக் தனது குறிப்பில்' "அக்பர், தாம் வாழ்ந்ததைப் போலவே இறந்தார். அவர் தனது வாழ்நாளில் என்ன சட்டத்தை பின்பற்றினார் என்பதோ எந்த மதத்தைச் சார்ந்தவராக இறந்தார் என்பதோ யாருக்கும் தெரியாது. அக்பர் ஒரு முஸ்லிமாக இறந்தார் என்பதை நிரூபிக்கும் முயற்சிகளும் பலன் அளிக்கவில்லை". அக்பரை நன்கு அறிந்த ஜெரோம் சேவியர், "அக்பர் ஒரு மூராகவோ (முஸ்லீம்) அல்லது ஒரு கிறிஸ்தவராகவோ இறக்கவில்லை. அவர் புறஜாதியார் பிரிவில் இறந்தார் என்று எழுதப்பட்டுள்ளது நிச்சயம் சரிதான்." என்று குறிப்பிடுகிறார்.

அக்பர் இறந்தபோது, 'ஒரு பெரிய மனிதர்' மற்றும் 'ஒரு சிறந்த ஆட்சியாளர்' தங்கள் மத்தியில் இருந்து கடந்து சென்று விட்டதை மக்கள் உணர்ந்தார்கள். அக்பர், அனைவருக்கும் பிரியமான ஒரு மனவுறுதியுள்ள பேரரசர். பெரியவர்களோ அல்லது சிறியவர்களோ, உயர்வானவரோ அல்லது தாழ்ந்தவரோ, அண்டைவீட்டாரோ அல்லது அந்நியரோ, கிறிஸ்தவர்களோ அல்லது முஸ்லீம்களோ அல்லது இந்துக்களோ, யாராயிருந்தாலும் அனைவருக்கும் கருணை காட்டு பவராக வாழ்ந்தார். ஒரு பேரரசராக அவர் மிகவும் தாராளமானவராக இருந்தார் என்று கூறலாம். அப்படியானால், மத நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கை பற்றிய விவாதத்தைப் பொறுத்த வரையில் அவரை மகாத்மா, புத்தர் மற்றும் பேரரசர் அசோகர் ஆகியோருடன் ஒப்பிடலாம்.

கிறிஸ்தவர்கள் அவரைப் பற்றி, "அக்பர் கடவுளுக்குப் பயந்து வாழ்ந்தார், அவர் தினமும் நான்கு முறை ஜெபிக்கத் தவறவில்லை. அவர் தமது பல கடமைகள் மத்தியிலும், 'சூரிய உதயம்' 'சூரிய அஸ்தமனம்' 'நண்பகல்' 'நள்ளிரவு' ஆகிய நான்கு-வேளை பிரார்த்தனைகளை ஒருபோதும் குறைக்கவில்லை. எல்லாவற்றிலும் பெரிய குறை என்னவெனில்: மனுகுலத்தை மீட்க வந்த கடவுளின் ஒரே மகன் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அவரது புரிதலை அவர் தைரியமாக அறிக்கைசெய்யத் தவறியதுதான்." என்று எழுதுகின்றனர்.

அக்பரை அவரது முதன்மையான காலத்தில் இருந்தே அறிந்திருந்த தந்தை. மான்சரேட, "அக்பர் ஒரு ராஜாவின் கண்ணியத்திற்கு ஏற்ற உயரத்திலும் முக தோற்றத்திலும் இருந்தார், அதனால் யாரும் முதல் பார்வையில் அவரை 'ராஜா' என்று எளிதில் அடையாளம் கண்டுவிடமுடியும். அவரது புருவம் அடர்த்தியாகவும் அகலமாகவும் இருந்தது. மற்றும் சூரியன் ஒளிரும் போது கடலின் தோற்றம் போல் அவரது கண்கள் பிரகாசித்தது. அவர் சிரிக்கும்போது அவர் சற்று தோற்றம் சிதைந்துவிட்டார்; ஆனால், அவர் அமைதியாக இருக்கும் போது ஒரு உன்னதமான மற்றும் அமைதியானவராக, கண்ணியம் மிக்கவராக காணப்பட்டார்; கோபத்தில் அவர் கம்பீர மானவர்." என்னும் தெளிவான விளக்கத்தின் மூலம் அக்பரது உருவப்படத்தையே நம்முன் கொண்டு வருகிறார்.

அக்பரின் மரணம் வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. அவருடன் முகலாய பேரரசு அதன் உச்சத்தை கடந்தது, அவரது வாரிசுகள் எவரும் எதிர்பாராத விதமாக, அக்பரது பேரரசின் 70வருடங்கள் முடிந்தபோதே, அதன் நீண்ட வீழ்ச்சி தொடங்கிவிட்டது தெளிவாகத் தெரிந்தது. மற்றொரு சக்தி திறம்பட அதன் இடத்தைப் பிடித்தது. கிழக்குப் பகுதியில், போர்த்து கீசிய ஆதிக்கமும் அதன் கிறித்தவப் பணிகளின் மேலாதிக்கமும் வீழ்ச்சி நிலையை அடைந்தன. சில நூற்றாண்டுகள் கடந்தபோதிலும், அக்பரின் மரணம் ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பாகவே கருதப்படுகிறது..

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்.......

**AUTHOR: DR.MRS.SALOMI MANOHAR M.A; M.PHIL; P.HD ASSISTANT PROFESSOR (RTD),**

**(POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA**

================================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஜனவரி 2024

**ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்**

நாள்: 10-01-2025 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்**

நாள்: 17-01-2025 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்**

நாள்: 24-01-2025 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி "தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்தி ருக்க" ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

## DETAILS ABOUT US

**CONTACT DETAILS:**

MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,

MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,

GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

**BANK DETAILS:**

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

**UPI DETAILS:**

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

# செய்தித்துளிகள் – ஜனவரி 2025

1. உள்நாட்டில் நிலையான அரிசி விநியோகத்தை உறுதி செய்யும் பொருட்டு கடந்த 2022ம் ஆண்டு ரஷியாவில் விதிக்கப்பட்ட அரிசி ஏற்றுமதிக்கான தடையை 2வது முறையாக ஜூன்-30, 2025 வரை நீட்டித்து ரஷிய அரசு உத்தரவு.

2. இந்தியா முழுவதும் 2021 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில், வனப்பகுதி மற்றும் மரங்கள் வளரும் நிலபரப்பு 1,445 சதுர கிலோமீட்டர் அளவுக்கு அதிகரித்து இருப்பதாக ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் தகவல்.

3. தமிழ்நாட்டில் 220வகை ஜெனிரிக் மருந்துகள் கொண்ட 'மக்கள்-மருந்தகம்' 1000இடங்களில் அமைப்பதற்கு மக்கள் நல்வாழ்வு மற்றும் கூட்டுறவு துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவதாக அமைச்சர் மா. சுப்பிரமணியன் தகவல்.

4. சென்னை மெரினாவிலுள்ள 'லைட்-ஹவுஸ்'ன் 11வது மாடி யில் சக்திவாய்ந்த சிசிடிவி மற்றும் ரேடார் பொருத்தப்பட்டது. இதன் மூலம் 150கி.மீ தொலைவிலுள்ள கப்பல்கள் மற்றும் படகுகளை கண்காணிக்க முடியும் என தகவல்.

5. ஏடிபி தரவரிசையில் 98ம் இடத்திலுள்ள இந்திய டென்னிஸ் வீரர் சுமித் நாகல், ஜனவரி 12முதல் 26வரை நடைபெறும் ஆஸ்திரேலிய ஓபன் போட்டிக்கு நேரடியாக தகுதி பெற்றார். இவர் இத்தொடரில் பங்கேற்பது இது 5-வது முறை.

==========================================================================================

# புத்தாண்டு 2025 நல்வாழ்த்துக்கள்.

**NEW YEAR-2025 GREETINGS**

அன்பான இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், வலைதளப் பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்து திருச்சபை இறை மக்கள் மற்றும் அச்சகத்து நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம்; கனிந்த **புத்தாண்டு 2025** நல்வாழ்த்துக்கள்.

## HAPPY

## NEW YEAR - 2025

இரட்சிப்பு

ஊழிய-குடும்பத்தார்